REGD. No. 3712.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# வகுளமாலை.

திருவல்லிக்கேணித் தமிழ்ச் சங்கத்தினின்று மாதந்தோறும் வெளிவரும்
ஒரு தமிழ்ப்பத்திரிகை.

"கண்ணன் கழலிணை
நண்ணும் மனமுடையீர்!
எண்ணும் திருநாமம்
திண்ணம் நாரணமே" — வகுளாபரணர்.

"அகரமுதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு"
"தனக்குவமை யில்லாதான்றாள் சேர்ந்தார்க்கல்லான்
மனக்கவலை மாற்றலரிது" — திருவள்ளுவர்.

"உலகம் யாவையுந் தாமுளவாக்கலும்
நிலைபெறுத்தலு நீக்கலும் நீங்கலா
அலகிலா விளையாட்டுடையாரவர்
தலைவரன்னவர்க்கே சரணங்களே" — கம்பர்.

தொகுதி 1. { ஈசுவர ஸ்ரீ ஐப்பசிமீ { பகுதி 10.
VOL. 1. { NOVEMBER 1937. { No. 10.

உள்ளுறை.


| | | | |
|---|---|---|---|
| 1. | தருமத்திட்டம். | பத்திராசிரியர். | 150. |
| 2. | அபிநந்தனம். | ஸ்ரீ உபவே தில்லியம்பூர் சக்ரவர்த்தி வெங்கடாசாரியர். | 153. |
| 3. | திருவாய்மொழி அநுபவம். | ஸ்ரீ உ-பவே ஏ வி. கோபாலாசாரியார். | 153. |
| 4. | காலஞ்சென்ற சக்ரவர்த்தியாசார் ஸ்வாமி. | ஸ்ரீ உபவே தில்லியம்பூர் சக்கரவர்த்தி வெங்கடாசாரியர். | 156. |
| 5. | ஸ்ரீ தில்லையம்பூர் ஸ்வாமியின் வியோகம் | ஸ்ரீமான் வி. கிருஷ்ணசாமி | 158. |
| 6. | ஐப்பசியில் திருமூலத்தவதரித்தான் | ஸ்ரீமான் ப. ரெ. திருமலை ஐயங்கார். | 159. |
| 7. | முதலாழ்வார்கள் | பாரத்வாஜி. | 162. |
| 8 | கண்டுதுணுக்குகள் | மாடபூசி. | 163. |


பத்திராசிரியர்:—
ஆர். கேசவய்யங்கார், M.A.B.L., அட்வகேட்.

வருஷம் 1-க்கு ரூ. ஒன்று] [தனிப்பிரதி அணா ஒன்றரை.

# சௌத் இண்டியன் ஸ்டோர்ஸ்,

## திருவல்லிக்கேணி.

நேர்த்தியான மளிகை சாமான் நேராகத் தருவித்து செட்டு ரெம்பக்கம்மியாக்கி சீக்கிரத்தில் கொடுக்கிறோம். நேரிலே மின்சாரத்தில் வறுத்தரைத்த காப்பியும், கடைந்தெடுத்த கட்டியான வெண்ணையும் நறுமணத்த புத்துறுக்கு மேன்மையான நெய்யும், குழையாத பழவரிசி வியன்மிக்க வமுதாகும், சீக்கிரத்தில் மாவு போல் குழைந்து போகும் ருசியான பருப்பும், பார்த்தவரும் கேட்டவரும் பரிவுடனே வாங்கிடுவார். மிக்க புகழ் பெயர் பெற்ற பரிமளப் பாக்கு சீராக வுடைத்து உயர்ந்த நல்ல வாசனைச் சரக்கு நெய்யுடனே சேர்த்து வேண்டு மட்டும் விற்கிறோம். இக்கடையில் இடைவிடாது வாங்குவோர்க்கு இக்கட்டே இருக்காது. மிக்க பல முண்டாகும். நிரம்ப அறிவும் ஊறும்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# வகுளமாலை.

தொகுதி 1. Vol. 1. | ஈசுவர௵ ஐப்பசி௴ NOVEMBER 1937. | பகுதி 10 No. 10

## தருமத்திட்பம்.

—:o:—

பருமறைப்பசுமுடிக்கண் பொதுளுமோர் பொருளாய்த் துள்ளிப்
பரனெனப்பரந்தேயாதி பகவனாய்ப்பதமலர்ந்து
திருமிளிர்ந்தருள் சுரக்கும் திப்பிய அறமாமூர்த்தித்
திருவனே ஒருவனென்று தேறுவார் அருவராவார். (1)

தீதறு திருத்திகழுநானெழுதிறத்தோன்
வேதவிதியோதுமுது வேதியர்வகுக்கும்
கோதகலுமாதி நெறிகண்டுதகநின்றார்
ஏதமிலராகுபத மேகுபவராவார். (2)

கூடாதெமக்கேடு மூடர்க்கதாமென்
றாடாடுமோடோபளூர் தோறுமூர்வார்
ஓடாவடற்சிங்கர் கோடேகடந்தால்
நாடது காடாகி நீறேபடாதோ. (3)

காதன்மை கையல்லதன்கட்செயற்கே
பேதைமையென்றென்று பேராகுமென்றார்
கோதன்மையாதென்றதோதும் தவத்தோர்
பாதம்பணிந்தோங்கு போதர்பணிப்பார். (4)

நூலளவை கொண்டறியப்படும் அறநெறிக்கண் கண்கூடாகக் காணப்படும் உலகு நன்கு ஒட்டுமொழுக்கத்தின் இன்றியமையாமை முன்பகுதியில் வலியுறுத்தப்பட்டது. இனி, மிகுந்துள்ள அறன் வலியுறுத்தலையே ஈண்டைக்கு முயலாநிற்பாம். "லோக ஸங்க்ரஹம்" எனும் நல்லறநெறிக்கண் உற்றவாறு ஒருங்கி நிலை நின்று ஒழுகாது அஃதையோர் வ்யாஜமாக்கிக்கொண்டு அறநெறி

திறத்தலும் கீழ்மை கடைப்பிடித்தலும் எக்காலுமேலாதென்றதை நன்கேவலியுறுத்துவாம். உலகோடும்படியெல்லாமொக்கத் தொடர்ந்தோடுவது உலகியணடாத்தலாகாது. உள்வழிப்படுதலும் இல்வழிப்படுதலும் முறையே குணமென்றும் குற்றமென்றும் ஆன்றோர் கூறுப. குற்றமகற்றிக் குணங்கொள்ளும் தூயரே அறவோராவார். ஏனையர் ஆகார். அவற்றுள்ளும் உள்வழிப்படும் குணத்திலும் இல்வழிப்படும் குற்றம் பெரிதென்பர் தமிழறிஞர். இதை வடநூலார் விதியினும் நிஷேதம் வலியுடைத்தென்பர். இல்வழிப்படும் குற்றம் எக்காலும் கொளற்பாலதொன்றாகா. ஈதே அறநெறியின் அடிப்படை. நம்பெரியோரனைவரும் அன்று தொட்டு இந்நெறிகாக்கும் தவமே பூண்டு வளர்ந்துள்ளார்கள். அக்காப்பின் பயனாயே இன்றளவும் யாம் தலைகாக்கப்பட்டுத் தழைத்து வருகின்றோம். பிறநாட்டார் பலரும் பண்டைக்காலத்து நம்பரத கண்டத்தின்மேல் படையெடுத்து வெற்றிபெற்று, தருமமேபுரியா நின்ற நம்முன்னோர்க்கு இடுக்கண்கள் பல செய்துவந்த அக்காலத்தும், பிறர் பெற்ற வெற்றியைப் பெரிதெனச் சிறிதும் கருதாது தருமமொன்றே பெரிதென்று திண்ணம்தேறி அவ்வொன்றையே காத்து வந்தவன்மையால் அவர்கள் காத்த அத்தருமமே அவர்களைத் தலைகாத்தருளிற்று. சற்று வெற்றிபெற்றதாமே மேம்பாடுடையாரெனக் கருதிய அப்பிறர்கள் வெற்றிபெற்றமையும் இருந்து போந்தமையும் கதையேயாயிற்று. "ராமோவிக்ரஹவாந் தர்ம:" "தர்மோ ரக்ஷதி ரக்ஷித:" என்றவை பொய்யாமொழியென்றதை சரித்திரம் நன்கே உணர்த்தும். அம்மூதுரைகளின் உண்மையே "பேணுங்கால் பேணுமுருவாகும்" என்று ஆழ்வார் செந்நாவிடையே செறிந்து செவ்விய தமிழாயிற்று. வினைவசத்தாலும் காலகதியாலும் வந்து சிறிதோர் போழ்திற்கழிவனவாய இடுக்கண்கணோக்கி நெடிதூழி அழியாத இழிவுபயப்பனவாய தீயகிரிசைகள் என்றுமே செயற்பாலனவன்று என்றே துணிந்து நன்னெறியூன்றி நிற்றலே பேராண்மையாகும். நெறிப்படாத வொழுக்கம் வழுப்பட்டேபோம். நெறிதுறந்தொழுகுவார் ஒழுக்கம் சிறுபான்மை நன்மையாயிற்றாயினும், அஃதோர் விழுக்காடேயாகுமாதலின் நிலைநின்று நற்பயன் பயக்காதே ஒழியும். நெறிகாக்க இயலாத ஓட்டை மனத்தர் உலகுகாக்குமியல்பினராகார் என்றதை அவரது

மனவோட்டை தானே காட்டிவிடும். நெறிதுறந்து நல்லார்போல் ஒழுகுவோர் வழிபெரும்பாலும் உருமீன் கோடற்கிருக்கும் கொக்கினது வழிபோல்வதொன்றேயாம் என்றது காட்சியளவையானே தெளியலாம். அன்றி அஃதறுந்த அவ்வொன்றின் நெறிபோல்வதொன்றாகவுமாம். அறம் துறந்தவாழ்ச்சி எத்துணைமாட்சித்தாயினும் அது உயிர்துறந்த ஆக்கையினும் இழிவுபட்டேபோம். அறம் துறந்து செழிப்பினும் அது ஈமத்தின் செழுமையையே ஒக்கும் என்றது வான்மீகி திருவுள்ளம். மெய்ம்மை (ஸத்யம்) தன்னையும் காக்கும் வன்மைவாய்ந்தது தருமமேயாதலான் தருமத்தின்கண் நிலைநின்ற ஒன்றே மெய்ம்மையாம். "ராமோவிக்ரஹவாந்தர்ம:" என்ற வான்மீகி திருவுள்ளமும், "பேணுங்கால் பேணுமுருவாகும்" என்ற ஆழ்வார் திருவுள்ளமும் "மெய்ம்மையின் வேலிபோல்வான்" என்று கம்பர்க்கு ஒருங்கே கண்கூடாகிய சீர்மை. ஓராவிற்கிரு கோடுபோலும், ஓர் பறவைக்கிரு சிறகுபோலும், தருமத்துக்கு வருணமும் சரணமுமென்றமே நல்லறவோர் கண்டுகளித்த தருமச் சுருக்காட்சி. அனைத்துலகுக்கும் ஒருயிராய் விளங்கும் ஸர்வ சரீரியான பரம்பொருளின் இறைநிலை இவ்வுலகின்கண் நிலைநின்றது வருணநெறியின் கண்ணேதான் என்றும், அந்நெறிக்கண்ணே நிலைநின்று விளங்கும் தரிசனம் 'சாரீரக' தரிசனமொன்றே யாதலால், இத்தரிசனமொன்றே வைதிகமென்றும், எம்பெருமானார் தாமே தமது தரிசனத்துக்கு வருணநெறியே அடியென்று திருப்பாடியத்தில் இங்கலிலி செய்தருளினர். உடன் மிசையுயிரெனக் கரந்தெங்கும் பரந்துவிளங்கும் பரம்பொருள்தானே தனது திருவருளை வெளியிட்டுக்கொள்ளும் முறையே வருணநெறி என்றது எம்பெருமானர் திருவுள்ளமாதலின் இந்நெறியின் தன்மை நன்கு தெளியாவிடில் ப்ரதாநப்ரதிதந்த்ர உண்மையும், ஆன்மகுணங்களின் பெருமையும், சரணநெறியின் அருமையும் அறியவொண்ணாதென்றே துணியலாம். சாரீரக ஸித்தாந்தப்ரதாநப்ரதி தந்த்ர வடிவாயே விளங்கும் வேதப்புள்ளுக்கு, உருத்திரையும் ஸங்கீர்த்தியும்போல், வருணமும் சரணமும் இரண்டு சிறகுகள்போல்வன என்றது தென்னிதாம். இல்லையேல், "லூநபக்ஷ இவாண்டஜ:" (வெட்டிய இறகுப்புட்போலாகும்) என்றதேயாம். ஆதலால் முதன் முதலே இவ் வருண நெறியைச் சிறிதாராயப் புகுவாம்.

வருணமாய்ச்சரணமாரு வன்மையேதன்மையாகு
கருணையாய்ப்பரந்ததண்காக்கடவுளாய்க்கலந்தவர்ந்த
தருமமாவுருவமாகு தன்னுருவுலகமாகிப்
பெருபதம்பெறுத்த மண்ணல்பெருமையாய்ப் பெருகுவாமே. (1)

நான்மறைத்துறையேநாடி நால்வகைநெறியேயொன்றித்
தாமென னுங்லையேநீக்கித் தன்னிறைநிறையேதேறி
ஆனிரைகாத்ததேவன் தாளிணை தழைக்கும்தய்ய
தேனெனவொழுகுநீரார் தெள்ளியஉள்ளம்கொள்வாம். (2)

பத்திராசிரியர்.

---

## அபிநந்தனம்.

வகுளமாலைப்பத்திரிகையில் தொகுதி ஒன்றில் பகுதி ஆறில் நம் சமயாசிரியத்தலைவரான வேதாந்தவாசிரியர் விஷயமான 'ஊசல்' என்னும் கிரந்தம் படித்தேன். அது உரைச்சுவை, பொருட்சுவை பொதிந்திருக்கிறது. நம்மகாதேசிகரால் இயற்றப்பெற்ற ஊசற் பாலுப்தமாகிலும ஆசிரியர் விஷயமான இந்நூல் திருவரங்கத்தமுத ஞர்மொழி திருமொழிகளிற் சேர்ந்தாப்போல் நம்மாசிரியர் பிரபந்தத்தில் சேர்க்கத்தட்டில்லை. இது இன்பம் பொதிந்த இசைத்தமிழில் இன்றியமையாததாக இருக்கிறது. இதன் ஆசிரியர் நன்னூல் முதலிய நற்கலைகளை நன்கு நவின்றுநவன்றிருக்கிறார். வடமொழியிலும் தென்மொழியிலும் சீரமைந்தசொல்பெருகிய நாவுடைய இம்மகான் அரோகராய் நீடூழிகாலம் வாழ்க.

தில்லியம்பூர் சக்ரவர்த்தி வெங்கடாசாரியர்.

---

## திருவாய்மொழி அநுபவம்.

(முன்தொடர்ச்சி.)

'அறிதல்' என்பது வேதாந்தங்களில் 'உபாஸநம்' 'தொழுதல்' என்பதைச் சொல்லுமென்று ஸ்ரீ சங்கர பாஷ்யத்திலும் நமது ஸ்ரீபாஷ்யத்திலும் விளக்கப்பட்டது. 'அறிவது' என்பது "தொழுவது" என்பதை உணர்த்தும் என்றதை ஆழ்வார் முன்னரே காட்

டியருளியதின் அழகை ரஸிக்கவேண்டும். 'வேதநம்' 'உபாஸநம்' என்றார் போதாயநர். 'தத்விஜிக்ஞாஸஸ்வ' என்றதற்கு "அவனைத் தொழு" "அவனடிதொழு" என்று நம்மாழ்வார் ஓர் பொருளென்றுரைத்தார். ச்ருதியில் தகப்பனரால் பிள்ளைக்கு உபதேசம். இங்கே தன்மனத்திற்கே உபதேசிக்கிறார். பிறருக்கு உபதேசிப்பவர் முன்னமே தம்மை நன்கு திருத்திக் கொள்ளவேண்டும். 'அநுவசாத் ஆத்மசித்தம்' (தன் சித்தத்தைக்குறித்து அநுசாஸநம் செய்து அதை சிஷ்யனாக்கிக் கொண்டார்) என்று ரத்நாவளியில் ஸாதிக்கப்பட்டது. முதல் பத்து முடிவிலும் 'நெஞ்சமே நல்லை, நல்லை," என்று திரும்பவும் திரும்பவும் தன் மனமென்னும் சீடனை, சுகர்பரீக்ஷித்தைக் கொண்டாடியது போல், கொண்டாடுகிறார். "நகர்தாகாதிநம் சாஸ்தி" என்றது மஹாபாரதம். உபதேச காதை பாடுபவர் காதை பாடும் நூலாசிரியரைக் கட்டுப்படுத்துவதில்லை. "குலிங்க சகுநியைப்போல்" என்று அங்கே பேச்சு. உபதேச காதைகளான ஸாமங்களைப்பாடும் ஆழ்வார் அந்த லோகாபவாதத்திற்கு இலக்காவரோ? இந்த ஆநந்தமய வித்யையில் ஜீவனுக்குள்ளிருக்கும் ஆநந்தமய புருஷனும் ஸூர்யமண்டலத்திலுள்ள பொன்மயமான சுடர்த்திருமேனியுடைய நாராயணனும் ஒன்றே என்று ஓதப்பட்டிருப்பதை அனுசரித்து அச்சுடரை நினைத்து "அவன் சுடரடி" என்று ஸாதிக்கிறார். ஒண்கதிரோன் மண்டலத்தில் சுடரான பொற்றிருமேனியில் கண்கள் தாமரை, திருவடியும் தாமரை, பொன்னுமாய நாறுவது. ஸூர்யமண்டலத்திலுள்ள ஜ்யோதிர்மயமான புருஷனையறிபவர்க்கு எல்லாப்பாபங்களும் எல்லாவினைகளும் அற்றுப்போகும் என்று ஸூர்யமண்டலத்திலுள்ள பெருமானைப்பற்றிய சாந்தோக்கிய உபநிஷத்து ஓதுகிறது. "துயரறுசுடரடி" என்று அதையும் காட்டுகிறார். ஆநந்தமய வித்யையில் வினைகள் கழிவதும், எல்லையற்ற ஆநந்தம் அவனருளால் கிடைத்து அவனோடுகூட அவனுடைய குணங்களை இன்பமாயனுபவிப்பதும் காட்டப்படுகிறது. அங்கே மோக்ஷதசையில் ஆநந்தமயப்ரஹ்மத்தை அடைந்து ப்ரஹ்மத்திற்கு அநுசரர்களாக லோகரக்ஷண வ்யாபாரங்களில் பணிவிடை செய்துகொண்டு யதேஷ்டமாக இனிது சஞ்சரித்துக்கொண்டு ஸாமகாநம் செய்வதை ஓதியுள்ளது. "விருப்பத்துடன் இன்பமாகத் தொழுவது" என்பதை

"என் அவா" என்றும், "சூழ்ந்ததனிற்பெரிய என்னவா" என்றும்; "அவாவிலந்தாதி" பாடித்தொழுவதையும் முடிவில் பேசுவதால் காட்டுகிறார். இந்தத் திருவாய்மொழியாகிய ஆயிரம் ஸாமங்களை "காநம் செய்கை" என்னும் பெருமாள் திருவடித்தொழுகையையும் தமது மனத்திற்குக் கட்டளையிடுகிறார் "தொழுது எழு என்மனனே" என்று இத்தொழுகை என்னும் ஸாமகாநம் முடிந்ததும், உடனே 'துயரற்று' 'எழுவதே' 'விடுபெற்றதே' பயனாயிற்று. இங்கே தொழுகையாகும் இவ்வாயிரநூலும் தசகுணிதோத்தர க்ரமேண உயர்கிறது. ஓரோர் பாட்டே அநுபவபரீவாஹமானது. ஒன்றைப்பத்தோடு பெருக்கி ஓர்பதிகமும், ஓர் பதிகத்தைப்பத்தோடு பெருக்கி ஓர் நூறும், அதைப்பின்னும் பத்தோடு பெருக்கி ஓர் 'ஆயிரமும்', ஆக, இத்திருவாய்மொழியும் பத்துப்பத்தாகப்பெருகி உயர்கிறது. ஓரோர் பாசுரமும் உயர்ந்த மாநுஷாநந்தத்தில் ஓர் மாத்திரையாகும். "ஸஏகோ மாநுஷஆநந்த:". அவதாரக்கணக்காகிய 'பத்து' என்னும் எண்ணால் பெருக்கப்பட்டது. பக்தியோகமான கீதை அவதரித்தது போல் இத்திருவாய்மொழியும் பக்தியோகாவதாரமாகும். "கேசவன் தமர்" மட்டிலும் பன்னிரண்டாயிற்று. அத்திருநாமங்கள் பன்னிரண்டாகலின், அத்திருநாமப்பாக்களின் எண்ணும் குறைக்கவொண்ணாதாயிற்று. யஜுர்வேதமான தைத்திரீய ச்ருதியும் முக்தர்கள் "இன்புற்று ஸாமம் பாடுகிறார்கள்" என்றது. அங்குப்பாடும் ஸாமகாநத்தை "முக்தகீத" மென்பர் வேதாந்திகள். ஆழ்வாரும் முக்தரைப்போல ஸாமகாநம் செய்கிறார். "நான், ஈச்வர தத்துவத்துக்கு அந்நமாய் (இனிய போக்கியமாய்) ஆகவேணும்; நான் ஈச்வரனை இனிய அமுதாகப் புசிக்கிறேன்; நான் ச்லோகம் பாடுகிறேன்" என்று அங்கே ஸாமகாநம். இங்கும் தமக்கு "உண்ணும் சோறும், பருகு நீரும், தின்னும் வெற்றிலையும் எல்லாம் கண்ணன்" என்றே பாடுகிறார். இந்நூலின் முடிவில் "என்னுருயிரை;" "ஆரப்பருகவெனக்காராவமுதானையே" "எனக்காராவமுதாய் எனதாவியை, என்னுருயிரை மனக்காரமை மன்னியுண்டிட்டாய்" என்று பாடுவதும், "அஹமந்நம் அஹமந்நம் அஹமந்தம், அஹமந்நாத: அஹமந்நாத: அஹமந்நாத:" என்ற காநாநுபவமேயாகும். இப்படியொருவர்க்கொருவர் அந்தமில் பேரின்பமாய், அபர்யாப்தாம்ருதமாய், அத்யந்

தப்ரியமாய், அதாவது, பெருமாளாலும் வருணிக்க இயலாத எல்லை யற்ற ப்ரியமாய், ஒருவர்க்கொருவர் ஆருயிராய் மேலநந்த காலமும் நடப்பதால், மீண்டும் ஸம்ஸரிப்பதாகிய "புநராவ்ருத்தி" சங்கை யே இல்லை என்று முடிவில் காட்டுகிறார். இவ்வாறே ஸூத்ரகாரரும், ஸ்ரீபாஷ்யகாரரும் தமது நூல்களின் முடியில் காட்டியுள்ளார்கள்.

ஏ. வி. கோபாலாசார்யர்.

---

## காலஞ்சென்ற சக்ரவர்த்தியாசார் ஸ்வாமி.

இம்மகான் குடந்தை நகரின் இடதிசையில் நீர்வளம், நிலவளம் பொருந்தி, தென்னை, கமுகு, வாழை, பலாசோலை சூழ்ந்தழகான தில்லமூர் என்னும் அபிஜாத கிராமத்தில் முடும்பி சக்ரவர்த்தி குலத்தில் பலதலைமுறையாய் இருமறையிலும் நிறம்பெற்ற திருவைணவர் ஸந்ததியில் கவளக்களபத்தின் உச்சி முத்தம்போல் அவதரித்து விளங்கி வந்தார்.

மைசூரிலிருந்த கரூர் சிமாசார்ஸ்வாமியின் சிஷ்யஸம்பந்தத்தினால் வியாகரணத்தை அதிகரித்தும், ஸ்ரீ அஹோபில மடத்தில் 33-வது பட்டம் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருந்த ஸ்ரீ வண் சடகோப ஸ்ரீ சடகோபயதீந்திர மகாதேசிகரிடம் இருநிசம முடியும் அறிந்தவரான தன் தந்தையான வியாகரணம் கோபாலாசார் ஸ்வாமியிடத்தில் ஸாஹித்யம், அலங்காரம், வியாகரணமும் முறையாகக்கற்றார். சதுச்சாஸ்திர கல்பதரு என்ற பிருத மணிந்த ச வெ. மா. சேஷாசார் ஸ்வாமியினிடம் தர்க்க சாஸ்த்திரமும், வேதாந்தப்பிரகரண கிரந்தங்களும் முறையாய் அதிகரித்து மேலாகவேயிருந்தார். ஸ்ரீ அஹோபிலமடம் 38-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருந்த ஸ்ரீ வண் சடகோப ஸ்ரீ நிவாஸ சடகோப யதீந்திர மஹாதேசிகனிடம் வடமொழி வேதாந்தம் பூர்ணமாக அதிகரித்து, ஷை அழகிய சிங்கருடைய பரமகிருபைக்குப்பாத்திரமாய் எழுந்தருளியிருந்தார். ஷை மடத்தில் 40-வது ஆஸ்தானத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருந்த லக்ஷ்மீ நரஸிம்ஹ திவ்யபாதக ஸேவக ஸ்ரீ வண் சடகோப ஸ்ரீ ரங்கநாத

சடகோபஸ்வாமியின் பரமகிருபையினால் ஈடு முப்பத்தாறாயிரப்படியின் சூக்ஷ்மார்த்தங்களை நன்றாய் அதிகரித்து அம்மகானுடைய திருவடியைப்பற்றி ஸ்ரீ லக்ஷ்மீ நரஸிம்மன் திருவடியில் பரஸமர்ப்பணம் பண்ணி கிருதார்த்தரானார்.

உலகில் உயர்தரமான ஜ்ஞாநவிஜ்ஞானமுடையவர். விபத்தேயாயினும் பொய் வசனத்துக்கும் மானிடம் பாடவும் நாவையிசையார். உலகு மானும் உம்பரேயாயினும் சீர்தவறில் நுண்ணிய புல்லுக்கு உவமையிட்டிருப்பார். மிக்கவறிவுக்கும் அகமிலாத விஷயத்தையும் ஒருதரம்படிக்க நன்றுதான் அறிந்து பிறர் மனம்பட உரைக்கும் பிரதிபையின் பிரபலமுடையவர். இருமறையையும் ஒரு முறையாய் ஒரு மறையாய் விளக்கியருளியவர். உடன்பிறந்தாரிடம் மனைவியினும் மேலான பிரியத்துடன் நடந்தார். 'மத்த: பிரியதரோ நித்தியம்' என்னக் கடவதிறே.

சிறிய திருவடிபோல் தன் பெருமையைத்தான் நினையாதவர். அடிபணிந்தவரிடம் (யச்சார் தஸ்தக்திரவக் தவ்விய:) என்னும் நியமமன்றிக்கே ருஜுபுத்திதயாஸர்வம் ஆக்கியாது முபசக்கிரமே என்று இருந்துளர். கல்விக்கலன் ஒன்றாத வண்ணம் தான் வெகு பிரயாஸத்தினால் உணர்ந்த விஷயங்களையும் பிரியத்துடன் விரித்து அவர் தரிக்க பிரியம் பெறுவார். வயஸ: கர்மணோர் தஸ்வியம் ருதஸ்வியாபி ஜகஸ்வியசவேஷவர் சவிருத்தி ஸாரூப்பியம் ஆசரந் விசரேதிக என்பதைக் கணிசிக்காமல் இளைஞர்களுடனும் ஒப்பார் போல் நினைவுடையவர். கிருஷிக்த ஸமமான பல லாபா லாபாதிகளிலும் ஒரே முகமலர்ச்சிவாய்ந்தவர். சுற்றத்தாரிடமும் பற்றிலாத துறவறத்தன்மை துலங்கியவர் முப்பது வருஷகாலமாக இக்காலத்துக்கு அரிய பெரிய அறமான பராக்நவர்சியம் என்னும் நெறியுடையார். கல்வி கற்பது முதல் தர்மத்திலும் வாதி நிராகரணத்திலும் சக்கிரவர்த்தி ராமனாகத்தான் விளங்கி வந்தார்.

பிறருக்குப் போதிப்பதைக் கைக்கொண்டவர். ஆர்த்தி காலத்தில் டாக்டர் வந்து 'ஹார்ட்டு வீக்காக இருக்கிறது ஒருவருடனும் பேசக்கூடாது' என்றதற்கு 'அதுதான் முடியாது. பேசாமலிருப்பதே எனக்கு முடிவாகும்' என்றார். ததிதம்பிராத்ருயுக்த ; ஹி என்று முழுமையும் நடந்து வந்தார். ஒருவர் தப்புச்செய்ய உலகு,

நடைக்கு விரோதமாயினும் மிக்க கோபம்கொள்வர். பல சிஷ்யர்கள் வேண்டியும் ஸமாச்ரயணம் செய்விப்பதையும், தனக்கு ஒரு தனியன் என்றும் அநுஸந்தாநபத்தியத்தையும் இசைந்திலர். உலகில் ஸநாதநதர்மம் குறையாமல் ஓங்க வேண்டுமென்று வெகுஸபைகளில் விசித்திரமான உபந்யாசங்களை செய்து அருளினர். பழமையான வித்தையைக் கற்றவர். ஏழ்மையின்றி மேன்மைபெற வெகு விரும்பியுள்ளார். இவர் ஒரு வருஷத்துக்கு 350 நாட்கள் வெளியிலும் 10-நாள் சொச்சம் ஊரிலும் இருந்துகொண்டு துறவறத்தின் உரிமையைக் கைக்கொண்டிருந்துள்ளார்.

முறைப்படி குருகுல வாசம்செய்தார் ஸாந்தீபினிமுநியிடம் கண்ணனைப்போல. பாண்டித்யம் நிர்வித்யபால் வேதவிஷ்டாஸேத் என்னும்படியில் ஸர்வஞ்ஞனேயுமிருந்தார் பாலர்போல வடமொழியை நன்கறிந்து அவ்வளவு ஞானத்தையும் தென்மொழியில் பரிமாறிக் களித்திருந்தார் பட்டர்போல. எம்பெருமானுடைய குணத்தின் அநுபவமே கைக்கொண்டார் ஆழ்வாரைப்போல. தனக்கிருக்கும் சில அநுக்ரஹ விசேஷத்தையும் மறைத்து நைச்சியாநுஸந்தானமேவிட்டிருந்தார் ஆளவந்தார்போல ஸ்ரீமத் ராமாயணம் முதலிய அநேக கிரந்தங்களுக்கு அரிய பெரிய பலவர்த்தங்களைப் புகட்டி பரமாநந்தத்தைத் தானுமநுபவித்துப் பிறரையும் அநுபவிக்கச் செய்தார் நம்பிள்ளையுள்ளிட்டார்போல. தனது தருதிகளில் விருப்பம் இல்லாது தாமரையில் நீர்போல இருந்து வந்தார் குசேலர்போல

தில்லியம்பூர் சக்கிரவர்த்தி வெங்கடாசாரியர்.

---

# ஸ்ரீ தில்லையம்பூர் ஸ்வாமியின் வியோகம்.

ஸத்துக்களுடைய சேர்க்கை எனக்கொருபோதும் வேண்டாம் என்றார் ஒருபெரியார். இதற்கடி, இவர்களுடைய பிரிவு நேர்ந்தால் இதுநமக்கு ஆயுள்முழுவதும் வருத்தத்தையே தரும் என்பதாம். இவ்வார்த்தையின் உண்மையை இப்பொழுதே அறியலானேம். ஸ்ரீ தில்லையம்பூர் ஸ்வாமி நம்மை நீத்துத் தாமரைக்கண்ணன் உலகை அலங்கரித்தருள்வார் என்றஎண்ணம் சிறிதேனும் இல்லாத

நமக்குத்திடீரென்று நேர்ந்த இப்பிரிவே இவ்வுண்மையை எடுத்துக்காட்டியது. இது, இவ்வுலகத்தாருக்கு துக்கக்கலப்பில்லாத ஆனந்தம்கிடைத்தலரிது என்பதையும் எடுத்துக்காட்டுகிறது. இத்துயரினை நமக்குத்தந்த "நாகணைமிசைநம்பரர் செல்வர் பெரியர், சிறுமானிடவர் நாம் செய்வதென்ன?"

தில்லையம்பூர் ஸ்வாமியின் ஸேவை எனக்குப் பலமுறை கிடைத்தது. திருவல்லிக்கேணியில் இவர்செய்தருளிய ஸ்ரீராமாயண காலக்ஷேபத்தில் சக்ரவர்த்தித்திருமகனுடைய பட்டாபிஷேகத் தன்று இவர் பரிமாறிய சொல்லமுதைச்செவிமடுத்தேன். பின்னொருமுறை எழும்பூரில் இவருடைய உபந்யாஸத்தைக் கேட்கும் பேறும் எனக்குக்கிடைத்தது. இதற்கிடையில் திருவல்லிக்கேணி ஸ்ரீ அஹோபில மடத்தில் ஸ்ரீகோஷ்டீபுரம் ஸ்வாமிசெய்தருளிய ஓர் உபந்யாஸத்துக்குப்பிறகு இவர் செய்தருளிய வந்தனோபசாரத்தில் பல சாஸ்த்ரார்த்தங்களும் பொதிந்து கிடந்தன. இவ்வாறு வலை வைத்துப் பிடிப்பாரைப் போல் நமது உள்ளங்களைக் கவர்ந்து கொண்டு திடீரென்று இம்மானுடயாக்கையாகிய பொய்ச் சட்டையை உதறி எறிந்துவிட்டு வைகுண்டநாதன் திருவோலக்கத்தில்நித்ய ஸூரியாயினர்.

நிற்க, விண்ணகம் விளக்கல்வேண்டி நம்மிற் பிரிந்து வானஞ் சூடிய திலகம்போல் விளங்கும் இப்பெரியார் செய்தருளிய உலக ஸேவையை நந்தமிழகம் என்றென்றும் மறவாதிருக்கும் வண்ணம் செய்யவேண்டுவது நமது கடமையாகும். வகுளமாலையின் சென்ற மாதமலரில் திருவல்லிக்கேணி தமிழ்ச்சங்கத்தின் காரியதரிசி இதனை ஸூசிப்பித்திருக்கிறார். இதை நிறைவேற்றி வைப்பது ஆஸ்திகராயுள்ளோர் அனைவரும் கவனிக்கற்பால தொன்றாம்.

வி. கிருஷ்ணசாமி,
தமிழன்பன்.

---

## ஐப்பசியில் திருமூலத்தவதரித்தான்.

கலி 4471 க்குமேல் ஸாதாரண வருஷம் ஐப்பசி மாதம் மூல நக்ஷத்திரத்தில் கோமடத்துத்திருவம்சஸ்தரான திகழக்கிடந்தார் அண்ணருக்குத் திருக்குமாரராய் மன்னுபுகழ்மாமுனிவன் திருவவ

தரித்தார். இவரது அவதாரஸ்தலம் ஆழ்வார் திருநகரி என்றும், சிக்கள் கிடாரம் என்றும் கூறுப. இவர் சடகோபன் மறைவளர்த்தவரும், எதிராசனடிபணிபவரும், வைகாசிவிசாகத்தில் உதித்தவருமான திருவாய்மொழிப்பிள்ளை திருவடியில் ஆச்ரயித்துப் பஞ்சஸம்ஸ்காரம் பெற்று, ஸகல சாஸ்த்ரங்களையும் ஸ்ரீ பாஷ்யாதிகளையும் ஆழ்வார்கள் மகிழ்ந்துபாடும் செய்ய தமிழ்மாலை முதலான நம் ஸம்ப்ரதாய க்ரந்தங்களையும் அதிகரித்து தனக்கொப்பாரில்லை யெனலாம்படி திகழ்ந்து விளங்கினர். உலகத்தை உஜ்ஜீவிப்பதற்காக மிகச்சிறந்த துரியாச்ரமஸ்வீகாரம் செய்து, முன்னிருந்த திருநாமத்தோடே அழகிய மணவாள மாமுனிகள் என்னும் திருநாமம்பெற்று திருவரங்கம் பெரியபெருமாள நியமனத்தால் கோயிலிலேயே நித்யவாஸமா யெழுந்தருளியிருந்து நம்பிராமாநுசதர்சனத்தை விலக்ஷணமாய் வளர்த்து வந்தார்.

இவர் மணவாள மாமுனி, பெரியஜீயர், வரவரமுனி, வரயோகி, ஸௌம்ய ஜாமாத்ரு யோகீந்த்ரர், ரம்யஜாமாத்ருமுனீந்த்ரர், யதீந்த்ரப்ரவணர், ராமநுஜன் பொன்னடி, அழகிய மணவாள ஜீயர் என்ற திருநாமங்களாலும் வழங்கப்பெறுவர்.

இவர் செய்தருளின ப்ரபந்தங்கள் தத்வத்ரய வ்யாக்கியானம், ரஹஸ்யத்ரய வ்யாக்யானம், ஸ்ரீ வசன பூஷண வ்யாக்யானம், ஆசார்யஹ்ருதய வ்யாக்யானம், ஞானசாரப்ரமேயஸார வ்யாக்யானம், பெரியாழ்வார்திருமொழி ராமாநுசநூற்றந்தாதி வ்யாக்யானம், ஈட்டுப்ரமாணத்திரட்டு, தத்வத்ரய ப்ரமாணத்திரட்டு, ஸ்ரீ வசன பூஷண ப்ரமாணத்திரட்டு, உபதேச ரத்தினமாலை, திருவாய்மொழி நூற்றந்தாதி, ஸ்ரீ ஆர்த்திப்ரபந்தம், ஸ்ரீ யதிராஜவிம்சதி முதலியன.

ஆழ்வார்களிடத்தும் அவர் அருளிச்செயல்களிடத்தும் இவருக்கு அதிக ஆர்வம் உண்டு, 'தெருளுற்ற ஆழ்வார்கள் சீர்மையறிவாரார்?'; 'அருளிச்செயலை அறிவாரார்?'; 'ஆழ்வார்களையும் அருளிச்செயல்களையும் தாழ்வாக நினைப்பவர்களே நரகில் வீழ்வார்கள்' என்பன இக்கருத்தை வலியுறுத்தும்.

இவர் தம் ஆசாரியனைக் குறித்துப் பலபடியாகப்புகழ்வர், 'எந்தை திருவாய்மொழிப்பிள்ளை'; 'தீதற்ற ஞானத்திருவாய்மொழிப்பிள்ளை'; 'தேசந்திகழும் திருவாய்மொழிப்பிள்ளை' என்பன காண்க.

இவர் சிறந்த பேருரையாசிரியர் என்பது இவர் அருளிச்செய்த வ்யாக்யானங்களை ஸேவிப்பதனால் நன்கு விளங்கும். பூர்வாசாயர்களிடம் இவருக்குள்ள விசேஷ அபிமானம் இவர் கிரந்தங்களில் நன்கு வெளியிடப்படுகிறது. இவர் ஸ்ரீபாஷ்யத்தையும் பகவத் விஷயத்தையும் நன்கு அதிகரித்துச்செவ்வனே பரவச்செய்தவர் என்பது இவரது வ்யாக்யானங்களால் நன்கு அறியக்கிடக்கின்றது.

மாமுனிவன் தமிழ்த்திறம் திருவாய்மொழி நூற்றந்தாதி, ஆர்த்திப்ரபந்தம், முதலியவற்றில் நன்கு புலனாகின்றது.

மறைமுடித்தேசிகனிடமும் அவர் திவ்யஸூக்திகளிடமும் மணவாள மாமுனிவனுக்கு விசேஷ பாராட்டுதல் உண்டென்னத் தட்டில்லை. இதனை இவர் வியாக்யானங்களில் பரக்கக் காணலாம்.

இவருக்கு 'முப்பத்தாறாயிரப்பெருக்கர்' என்ற பிரசித்த திருநாமம் உண்டென்பது உலகறிந்த விஷயம். இதனால் ஈட்டின் பெருமை உலகறிந்துய்யச்செய்தவர் இவர் என்பதில் ஐயமின்று.

ஐப்பசியில் திருமூலத்தவதரித்த இம்மாமுனி திருவடியில் அஷ்டதிக்கெஜங்கள் என்னப்படும் எறும்பியப்பா, கந்தாடையண்ணன், ப்ரதிவாதிபயங்கரம் அண்ணன், பரவஸ்து பட்டபிரான் ஜீயர், வானமாமலை ஜீயர், திருவேங்கட ஜீயர், அப்பிள்ளை, அப்பிள்ளார் முதலியோர் ஆச்ரயித்த முதலிகள்.

ருதிரோத்காரி வருஷம் மாசி மாசம் கிருஷ்ண பக்ஷத்வாதசியில் இவர் திருநாடலங்கரித்தார்.

ஸ்ரீமணவாள மாமுனிகள் விஷயமாக கோயிற் கந்தாடையண்ணனருளிய மணவாள மாமுனிகள் கண்ணிநுண் சிறுத்தாம்பு, பரவாதி கேசரியாரருளிய ஸ்ரீசைலவைபவம், பிரதிவாதி பயங்கர அண்ணன் அருளிச்செய்த ஸ்ரீபாதாதிகேசமாலை, அப்பிள்ளாரருளிச்செய்த சம்பிரதாயச் சந்திரிகை, இராமநாதபுரம் சதாவதானம் முத்துஸாமியையங்காரென்கிற அனந்தாழ்வான் அருளிச்செய்த மணவாளமாமுனி நூற்றந்தாதி முதலியவை ஓதியுணரத்தக்கவை.

ப. ரெ. திருமலை ஐயங்கார்.

# முதலாழ்வார்கள்.

'எப்புவியும் பேசுபுகழ்ப்பொய்கையார் பூதத்தார் பேயாழ்வார் தேசுடனே தோன்று சிறப்பால் ஐப்பசியில் ஓணம் அவிட்டம் சதயமிவை ஒப்பிலவா நாட்களாயின. மற்றுள்ள ஆழ்வார்களுக்கு முன்னே வந்துதித்து நற்றமிழால் நூல்செய்து நாட்டையுய்த்த பெற்றிமையோர் என்று முதலாழ்வார்களென்னும் பேர் இவர்க்கு உலகத்தே நிகழ்ந்து நின்றது. அருள்மிகுந்ததொரு வடிவாய்க் கச்சிதன்னில் பொருண்மிகுத்த மறைவிளங்கப் புவியோருய்யப் பொய்கைதனில் வந்துதித்த புனிதர் பொய்கையார். இவர் தேவிற் சிறந்த திருமாலின் திவ்விய பஞ்சாயுதங்களுள் பாஞ்சஜந்யமென்னுந்திருச்சங்கின் அம்சமாய்த் திருவவதரித்தவர். திருக்கடல் மல்லையென்கிற மஹாபலிபுரத்தில் குருக்கத்திமலரிலே கௌமோதகியென்னும் கதாயுதத்தின் அம்சமாய் அவதரித்தவர் கடன் மல்லைக்காவலனாய பூதவேந்து. திருமயிலை நகரியில் ஸ்ரீ ஆதிகேசவப் பெருமாள் கிணற்றிலேயுண்டானதொரு செவ்வல்லிப்பூவிலே நந்தகமென்கிற வாட்படையின் அம்சமாய் அவதரித்தவர் பேயாழ்வார். முன்னாள் இருளதனில் தண்கோவலிடைகழிச்சென்று இருவருடன் நிற்கவும் மாலிடை நெருக்க பொய்கைமுனி பூமியாகிய தகழியில் கடல் நீரையே நெய்யாகக்கொண்டு சூரியனை விளக்காக ஏற்ற, பூதத்தார் அன்பாகிய தகழியில் ஆர்வத்தை நெய்யாகவும் சிந்தையைத்திரியாகவும்.கொண்டு ஞானதீபத்தை ஏற்ற இவ்விரண்டினொளியாலும் இருளற்றதனால் பேயாழ்வார் பெருமானைத் தாம் கண்டமைகூறியவளவிலே மூவரும் ஆழியஞ்செல்வனுடைய சொரூபத்தை அறிந்து அனுபவித்து ஆனந்தமடைந்து அப்பெருங்களிப்பு உள்ளடங்காமையால் அதனைப் பிரபந்த முகமாக வெளியிட்டு உலகத்தாரைவாழ்விக்கக்கருதினார்கள். அப்பிரபந்தங்கள் முதல் திருவந்தாதி, இரண்டாந்திருவந்தாதி, மூன்றாந்திருவந்தாதி எனப்பெயர் பெறும்.

வேதசிரத்தேசிகனார்

'பாட்டுக்குரியபழையவர் மூவரைப்பண்டொருகால்
மாட்டுக்கருடருமாயன் மலிந்துவருத்துதலால்

நாட்டுக்கிருள்செகநான்மறை யந்திநடைவிளங்க
வீட்டுக்கிடைகழிக்கே வெளிகாட்டுமிம்மெய்விளக்கே'

என்பர். எம்பெருமானைப்பாக்களாலே துதிக்கத்தகுந்தவர்களான முதலாழ்வார்கள் மூவரை முன்னொரு காலத்தில் தன்னுடைய விபூதிகளான ஜீவன்களுக்கு அருள்புரியும் எம்பெருமான் மிகவும் வருத்தப்படுத்தினதால் உலகத்துக்கு அஜ்ஞானம் போம்படியாயும், நான்மறையந்தியான உபநிஷத்துக்களிற் கூறப்பட்ட பக்தி பிரபத்தி என்கிற உபாயங்கள் நன்றாய் விளங்க ஒரு வீட்டின் இடைகழியில் உண்டான உண்மையைக் காட்டும்படியான அந்தாதி ரூபமான விளக்கானது பிரகாசத்தை உண்டுபண்ணும் என்பது இப்பாசுரப் பொருள். முதலாழ்வார்களடி பணிந்து முகுந்தனருள் பெறுவோமாக.

பாரத்வாஜி.

---

# துண்டு துணுக்குகள்.

அடைக்கலப்பத்தை அடைவுடன் ஓதுமின். ஆராதவருளமுதம் பொதிந்திலங்கும் அமலன்காண் அரங்கநகரப்பன். இன்சொல்லிருக்கவன்சொற் சொல்வதேன்? ஈரைந்து தலையினோனைச்செயல் செய்ய இரட்டைக்கையன் அவன் தலை துணித்தான். உயர்நலமுடையவன் உம்பர்கோமான். ஊனமில் வாழ்க்கையை உத்தமர் உகப்பர். எம்பெருமானார் எதிகட்கிறையவர். ஏரணி சீர்த்தியோன் எங்களாழ்வான். ஐயாறன்றே ஆண்டாள் பணிப்பு. ஒன்றென்றிருப்பார் ஒருமையடைகுவார். ஓதுதலன்றே வேதியர்க் கொழுக்கம். ஔடதமன்றோ கங்கைத்தீர்த்தம்.

* * *

உடையவர் நியமனத்தினால் ஸ்ரீவிஷ்ணுபுராணத்திற்கு விசிஷ்டாத்வைத பரமாக ஸ்ரீபாஷ்யத்தின் கருத்துக்கிணங்க ஒருரைவகுத்தவர் எங்களாழ்வான். இவர் உடையவர் திருவடிகளிற் சார்ந்த எழுபத்துநான்கு சிம்மாசனாதிபதிகளில் ஒருவர். இவர் பூர்வசிகை ஸ்ரீவைஷ்ணவ வகுப்பினர். இவர் அவதரித்த ஊர் திருவெள்ளறை. திருக்குருகைப்பிரான் பிள்ளான்பால் சகலார்த்தங்களையும் பெற்ற

வர். நடாதூரம்மாள் இவரிடம் ஸ்ரீபாஷ்யம் கேட்டவர். உற்சா கத்துடன் அர்த்தங்களை எடுத்தியம்பும் சொல்வள முடைமை பற்றி இவரைத்தினவு கெடச்சொல்வன் திருவெள்ளறைச் சோழி யன் என்று ஆன்றோர் பல விடங்களிலும் கொண்டாடா நிற்பார்.

* * *

பாஷண்டர்களைச் சிநேகித்து அவர்கள் சோற்றை யுண்பதும் அவர்களைத் தன் வீட்டில் உண்பிப்பதுமாகிய செயல்களைச் செய்ய லாகா. வேதத்தை நிந்தித்து வேத விரோதமான காரியங்களைச் செய்பவனது சல்லாபங்களைக் கனவிலும் கருதலாகாது. இன்னும் அகிருத்தியத்தைச் செய்பவர்களையும் பிடால விரதத்தினரையும், சடரையும், ஹைதுகர்களையும், பகவிருத்திகரையும் வாயாலும் பூஜிக்கலாகாது.

மாடபூசி.

ஸ்ரீ:

# திருவல்லிக்கேணித்தமிழ்ச் சங்கம்.

**சங்க வித்வான்கள்.**

1. ஸ்ரீ உபவே தில்லைபம்பூர் வெங்கடாசார்ய ஸ்வாமி.
2. ஸேது ஸமஸ்தான வித்வான் ஸ்ரீ உபவே. ஆர். ராகவய்யங்கார் ஸ்வாமி.
3. ஸ்ரீ உபவே மு. ராகவய்யங்கார் ஸ்வாமி.
4. ஸ்ரீ உபவே. ஸ்ரீரங்கம் சடகோபாசார்ரிய ஸ்வாமி (மாம்பலம்).

**தலைவர்** ... ஸ்ரீமான் ஆர். கேசவய்யங்காரவர்கள்.

**உப தலைவர்கள்.** ...

1. ஸ்ரீமான் வி. நரஸிம்மாசாரியாரவர்கள்.
2. ,, ஆர். சந்தாநகிருஷ்ணய்யங்காரவர்கள்.
3. ,, யஸ். லக்ஷ்மி நரஸிம்மாசாரியாரவர்கள்.

**காரிய[illegible]யும், பொக்கிஷதாரரும்.** ஸ்ரீமான் ப. ரெ. திருமலை ஐயங்கார்.

**கமிட்டி மெம்பர்கள்.**

1. ஸ்ரீமான் ஆர். இராமசாமி ஐயங்காரவர்கள்.
2. ,, யஸ். கிருஷ்ணஸாமி ஐயங்காரவர்கள்.
3. ,, டி. ஆர். ஸ்ரீநிவாஸய்யங்காரவர்கள்.
4. ,, ஏ. வெங்கடாசாரியாரவர்கள்.
5. ,, வி. ஷண்முகசுந்தர முதலியாரவர்கள்.
6. ,, யஸ். குமாரசாமி செட்டியாரவர்கள்.
7. ,, இ. கே. சபாபதி முதலியாரவர்கள்.

**காரியாலயம்** ... 42-ஏ. வெங்கடரங்கம் பிள்ளை தெரு, திருவல்லிக்கேணி.

**முக்கிய நோக்கங்கள்.**

1. தமிழைப் பரவச் செய்தல்.
2. வாரந்தோறும் திருக்குறள் கம்பராமாயணம் முதலிய தமிழ் வகுப்புகள் இலவசமாக நடத்தல்.
3. தமிழ்ப் பெரியார் ஜன்ம தினங்களைக் கொண்டாடல்.
4. தமிழ் வித்வான் பரீக்ஷைக்குப் போகுமவர்களுக்கு வேண்டிய ஒத்தாசை செய்தல்.
5. சங்கவெளியீடாக ஒரு பத்திரிகை நடத்தல்.
6. பிராசீனசம்பிரதாய முறைகளைக் காப்பாற்றத்தக்க ஏற்பாடு செய்தல்.
7. புலவர்களைப் போற்றுதல்.
8. திருநாட்களை நன்கு கொண்டாடல்.

ப. ரெ. திருமலை ஐயங்கார்,
காரியதரிசி.

Printed at the Lakshmi Kantha Press, 405, High Road, Triplicane
and published by P. R. Tiramalai Ayyangar at 42-a, Venkatrangam Pillai St., Triplicane, Madras.